FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319468

1. District : மாவட்டம் Madurai PS: சரவல்நிலையம் VKAC Year: ஆண்டு 2026 FIR No.: மு.த.அ. எண் 6/2026 Date: நாள் 19.06.2026

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2015 and Bnss Act. Sections பிரிவுகள்: 7, 7A of PC Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 and 106 Bnss

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 19.06.2026 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 12.00 hrs Time to : நேரம் வரை 20.00 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.06.2026 Time : நேரம் 16.45 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 19.06.2026 Time : நேரம் 17.30 hrs.

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் North west, 35 km.

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o. Motor Vehicle Inspector, Grade 1, Vadipatti, Neerathan, Madurai

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. R. Sridharapandian

(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு

(d) Nationality : நாட்டினம் Indian

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Inspection Cell Inspector

(g) Address : முகவரி O/o. District Inspection Cell officer, Madurai District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. T. Murali, Motor Vehicle Inspector, Vadipatti, Neerathan, Madurai and 9 others. [Names of other accused mentioned in the separate sheet]

8. Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

– Nil –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Attached Seperate sheet pages 3 to 14.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ..... on point of jurisdiction.

K. Kumaravel Inspector of Police

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறைமீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost

முதல் குற்றமுறைமீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறைமீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் ரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name பெயர் C. Jeyapriya Inspector of Police
Rank நிலை No. எண் Vellanduar

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும் 19.06.2018 18.45 hrs

Continuation of First Information Report of Theni V&AC Cr.No.06/2026 (Column No.7)

Accused No.	Accused Name
Accused 2	Selvi.M.Jeyalakshmi, Age 30/2026, D/o.Mariappan, Junior Assistant, Motor Vehicle Inspector Grade -1 Unit Office Vadipatti, Neeraethan, Madurai District – 625 218
Accused 3	Tr.M.Sekar, Age 45/2026, S/o.Mani, Date Entry Operator, BONTON Software Pvt.Ltd., Motor Vehicle Inspector Grade -1 Unit Office Vadipatti, Neeraethan, Madurai District – 625 218
Accused 4	Tr.S.Senthilkumar, Age 47/2026, S/o.Santhanam, Door No. 1/55, Thanichiyam, Madurai District. (Private Individual)
Accused 5	Tr.T.Premkumar, Age 35/2026, S/o.Thavasi, Door No.57, Kalavasal, Pandian Nagar, Madurai District.
Accused 6	P.Venkatesan, Agre 51/2026, S/o.A.V.Pandi, Kalvelipatti, Via Thanichiyam, Vadipatti Taluk, Madurai District.
Accused 7	Tr.D.Ujal Sarkar, Age 40/2026, S/o.Devan Sarkar, Ponperumal kovil street, Ramanayakanpatti, T.vadipatti, Madurai District.
Accused 8	Tr.C.Vijaypandi, Age 25/2026, S/o.A.Chinnapandi, Door No.3/275, Ambedkar Colony, Ayyankottai, Vadipatti, Madurai District.
Accused 9	Tr.R.Veeran, Age 53/2026, S/o.Rasu, Sathayar Dam, Madurai District.
Accused 10	Tr.K.Karuppaiya, Age 51/2026, S/o.Kottakalai, Door No.1/125-P, West Street, Viralipatti, Vadipatti taluk, Madurai District.

Honoured Sir,

Submitted,

இன்று 19.06.2026-ம் தேதி 16.45 மணிக்கு நான் (C.ஜெயப்பிரியா), காவல் ஆய்வாளர், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது மதுரை மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் அலுவலக ஆய்வுக்குழு ஆய்வாளர், திரு. R. ஸ்ரீதரபாண்டியன் அவர்கள் என்னிடம் கொடுத்த புகார் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்ளை பார்வையிட்டதில் புகாரில் உள்ள விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு. R. ஸ்ரீதரபாண்டியன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் அலுவலகம், மதுரை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க.எண்.19/2026/I2, நாள் : 19.06.2026 அய்யா, பொருள் : மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - போக்குவரத்து துறை - வாடிப்பட்டி மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை1 பகுதி அலுவலகத்தில் வாகனங்கள் பதிவு செய்வதற்கும், தகுதி சான்று, ஓட்டுநர் உரிமம், நடத்துனர் உரிமம் வழங்குவதற்கும், தனியார் ஓட்டுநர் பள்ளிகள் பணியாளர்கள் மற்றும் தரகர்கள் மூலமாக அவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வரும் தனிநபர்களான திரு.சேகர் மற்றும் திரு.செந்தில்குமார் உதவியுடன் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.முரளி அவர்கள் லஞ்சம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - ரூ.65,040/- - பணம் கைப்பற்றப்பட்டது - மேல் நடவடிக்கை வேண்டி புகார் அளிப்பது- தொடர்பாக. மதுரை மாவட்டம் வாடிப்பட்டி நீரேத்தானில் இயங்கி வரும் வாடிப்பட்டி, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை1 பகுதி அலுவலகத்தில் வாகனங்கள் பதிவு செய்வதற்கும், தகுதி சான்று, ஓட்டுநர் உரிமம், நடத்துனர் உரிமம் வழங்குவதற்கும், தனியார் ஓட்டுநர் பள்ளிகள் பணியாளர்கள் மற்றும் தரகர்கள் மூலமாக அவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வரும் தனிநபர்களான திரு.சேகர் மற்றும் திரு.செந்தில்குமார் உதவியுடன் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.முரளி அவர்கள் லஞ்சம் பெறுவதாக மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலை நேற்று

18.06.2026-ம் தேதி காலை 08.15 மணிக்கு ஆய்வுக்குழு அலுவலருக்கு தெரிவித்துள்ளார். பின்னர் அந்த தகவலை விசாரித்து விட்டு மேற்படி அலுவலகத்தில் திடீர் சோதனை செய்யலாம் என கூறியதன் பேரில், நானும், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர்கள் திருமதி.C.ஜெயப்பிரியா, திருமதி.T.சூர்யகலா மற்றும் போலீஸ் பார்ட்டியினரும் இணைந்து நேற்று காலை சுமார் 11:30 மணிக்கு வாடிப்பட்டி மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை - I பகுதி அலுவலகம் அமைந்துள்ள வாடிப்பட்டி நீரேத்தான் பகுதிக்கு சென்று, கண்காணித்தபோது, நேற்று காலையில் சீக்கிரமாக மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.முரளி அவர்கள் வாடிப்பட்டி தாலுகா அலுவலகத்திற்கு அருகில், வாகனத்தின் தகுதி சான்று (Fitness Certificate) பெற, புதிதாக போக்குவரத்து வாகனங்கள் (Transport Vehicle) பதிவு செய்ய போன்றவற்றிற்காக கொண்டுவந்திருந்த வாகனங்களை ஆய்வு செய்துவிட்டு அதற்குரிய லஞ்சப்பணத்தை அவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வரும் தனிநபர்களான திரு.சேகர் மற்றும் திரு.செந்தில்குமார் ஆகியோரிடம் கொடுத்து விடுமாறும் பின்னர் தான் வாங்கிக்கொள்வதாகவும் கூறிவிட்டு மேற்படி மோட்டார் வாகன ஆய்வாரள் திரு. முரளி வெளியூர் சென்றுவிட்டதாக தகவல் கிடைத்தது. அதன்பேரில் நேற்று மதியம் சுமார் 12:00 மணியளவில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள மேற்படி வாடிப்பட்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குள்ளே சென்று, மேற்படி அலுவலக ஹாலில் இருந்த இருக்கையில் அமர்ந்து பணி செய்து கொண்டிருந்த பின்னர் கேட்டுத்தெரிந்து கொண்ட பெண் அலுவலர் செல்வி. ஜெயலெட்சுமி அவர்களிடம் என்னையும் மதுரை ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. ஜெயப்பிரியா ஆகிய என்னையும், மற்றொரு காவல் ஆய்வாளர் திருமதி. சூரியகலா மற்றும் போலீஸ் பார்ட்டியினரையும் அவரிடம் அறிமுகம் செய்த பின்னர், மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்வது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது. அப்போது, அந்த பெண் சற்று பதட்டத்துடன் தனது இருக்கையை விட்டு எழுந்து நின்று, அவர் பெயர் ஜெயலெட்சுமி என்றும், அவர் மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் கடந்த மார்ச் மாதம் முதல்

இளநிலை உதவியாளராக (அயல்பணி) பணிபுரிந்து வருவதாகவும், தனக்கு வழங்கப்பட்ட பணியிடம் மேலூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் என்றும் தெரிவித்தார். மேலும் அவ்வலுவலகத்தில், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை - I திரு.முரளி அவர்கள் முழு கூடுதல் பொறுப்பாக வாடிப்பட்டியில் பணிபுரிந்து வருவதாகவும், அவர் மேலூர் மோட்டார் வாகன ஆய்வாளர் என்றும், அவர் ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை மட்டும் வாடிப்பட்டியில் உள்ள இவ்வலுவலகத்திற்கு வந்து பணி செய்து வருவதாகவும், மேலும், அவரது மோட்டார் வாகன ஆய்வாளரான திரு. முரளி அவர்கள் கூறியதின் பேரில், அவர்களது அலுவலகத்தை இன்று காலையில் 08:30 மணியளவில் திரு. சேகர் அவர்களால் திறக்கப்பட்டது என்றும், அதேபோல் திரு.முரளியின் அறிவுரையின் பேரில், அவரும் இன்று காலை 09:30 மணியளவில் அலுவலகத்திற்கு வந்து பணிசெய்து வருவதாகவும், திரு. முரளி அவர்கள் காலையிலேயே வாகனங்களை வாடிப்பட்டி தாலுகா அலுவலகத்திற்கு அருகில் ஆய்வு செய்துவிட்டு, அதற்கான ஆவணங்களுடன் காலை சுமார் 10:15 மணியளவில் அலுவலகத்திற்கு வந்து அந்த ஆவணங்கள் அனைத்தையும் மேற்படி சேகரிடம் கொடுத்து, அதனை அலுவலக கணினியில் பதிவேற்றம் செய்யும்படி கூறியதாகவும், பின்னர் திரு. முரளி அவர்கள் அவரது சொந்த வேலை காரணமாக நாமக்கல் செல்வதாக கூறி, அதற்காக அரை நாள் தற்செயல் விடுப்பில் செல்வதாக கூறி மதுரை வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலருக்கு எழுதிய தற்செயல் விடுப்பு கடிதத்தை அவரிடம் கொடுத்துவிட்டு காலை சுமார் 10:30 மணிக்கு அலுவலகத்தை விட்டு சென்றுவிட்டதாக கூறி அந்த தற்செயல் விடுப்பு கடிதத்தை எடுத்து ஆஜர் செய்தார். மேலும், அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. முரளி அவர்களால் நியமிக்கப்பட்டுள்ள தனிச்சியத்தை சேர்ந்த திரு.செந்தில்குமார் (தனிநபர்) அவர்கள் இன்னும் அலுவலகத்திற்கு வரவில்லை என்றும், மேலும், அவரது அலுவலகத்தில் வேலை பார்க்கும் கண்காணிப்பாளர் திரு. மகேந்திர பாபு அவர்கள் 16.06.2026-ம் தேதியன்று கொடுத்த தற்செயல் விடுப்பு கடிதத்தையும் எடுத்து ஆஜர் செய்தார். அதனை பார்வையிட்டதில், அவரது தாயின் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அன்னை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவேண்டி 18.06.2026-ம் தேதி

வியாழக்கிழமை 1 நாள் மட்டும் தற்செயல்விடுப்பு கேட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து, அவர் மேற்படி அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள சம்மதம் தெரிவித்தார். மேற்படி செல்வி. ஜெயலெட்சுமி அவர்களை விசாரித்த போது, அவர் தனது சொந்த செலவுக்காக ரூ.260/- வைத்திருப்பதாக கூறி அதனை அவரது ஹேண்ட் பேக்கிலிருந்து எடுத்து ஆஜர் செய்து அதற்கான முகாந்திரத்தை கூறினார். அவர் கூறிய காரணம் ஏற்றுக்கொள்ளும்படி இருந்ததால் மேற்படி பணம் ரூ.260/- அவரிடமே வைத்துக்கொள்ளும்படி கூறப்பட்டது. மேலும், மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் புகைப்பட அறையில் பணியிலிருந்த BONTON Software Data Entry Operator திரு. M. சேகர் அவர்களை விசாரித்த போது, அவர் நிலக்கோட்டையிலிருந்து தினமும் அலுவலகத்திற்கு பேருந்தில் வருவதாகவும், அவரது சொந்த செலவுக்காக ரூ.120/- வைத்துள்ளதாக தெரிவித்து தனது சட்டையின் வலது பக்க பாக்கெட்டிலிருந்து ரூ.120/-யை எடுத்து ஆஜர் செய்தார். அவர் கூறிய காரணம் சரியாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.120/- அவரிடமே வைத்துக்கொள்ளும்படி கூறப்பட்டது. மேலும், மேற்படி சேகர் அவர்கள் செல்வி. ஜெயலெட்சுமி கூறிய விபரங்களை தெரிவித்து, அவரும் இன்று காலையில் திரு. முரளி அவர்கள் அலுவலகத்திற்கு காலை சுமார் 10:15 மணிக்கு வந்து, இன்று அவரால் பார்வையிடப்பட்ட வாகனங் களுக்கான 96 ஆவணங்களை அவரிடம் ஒப்படைத்து, அவைகளை கணினியில் பதிவேற்றம் செய்ய வேண்டிய அவரிடம் கொடுத்துவிட்டு அரைநாள் தற்செயல் விடுப்பில் சென்ற விபரம் மற்றும் இதர விபரங்களை தெரிவித்தார். இச்சோதனையின் போது, இவ்வலுவலகத்தில் வராண்டாவில் இருந்த திரு.பிரேம்குமார் என்பவரை விசாரணை செய்ததில் அவர் ஆட்டோ டிரைவர் என்றும் அவர் Ape ஆட்டோ (Share Auto) TN 58 X 5697 -ஐ சுமார் 9 வருடங்களுக்கு முன்பு வாடிப்பட்டியைச் சேர்ந்த திரு.ராம்குமார் அவர்களிடம் விலைக்கு அதனை மதுரை மாநகரில் ஓட்டி வந்ததாகவும், அந்த ஆட்டோவிற்கு F.C எடுப்பதற்கு வந்தாக தெரிவித்து, அவரது பேண்ட் வலது பாக்கெட்-ல் வைத்திருந்த பணகத்தையை எடுத்து ஆஜர் செய்தார். அதனை வாங்கி எண்ணி பார்த்த போது அதில் ரூ.3,300/-இருந்தது. அப்பணத்தை பற்றி

அவரிடம் கேட்ட போது, அதிலிருந்த 300 தனது தினசரி செலவிற்காக வைத்திருந்தது எனக் கூறினார். அது ஏற்றுக்கொள்ளும்படி இருந்ததால் ரூ.300/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதுபோக மீதியிருந்த ரூ.3,000/- (500 X 5, 200 X 2, 100 X 1) த்தை லஞ்சமாக கொடுப்பதற்காக கொண்டு வந்த பணம் எனக்கருதி கைப்பற்றப்பட்டது. மேலும், அவ்வலுவலகத்தில் வராண்டாவில் திரு.பிரேம்குமார் அருகில் இருந்த திரு.வெங்கடேஷன் அவர்களை விசாரணை செய்ததில், அவர் நகரியில் உள்ள பாக்யா இன்டஸ்ட்ரீஸ்-ல் வேலை செய்து வருவதாகவும், அவருடைய இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் உரிமம் காணாமல் போனதால் புதியதாக ஓட்டுநர் உரிமம் எடுப்பதற்கு வந்ததாக தெரிவித்து, அவரது செல்போன் பவுச்சில் வைத்திருந்த வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதனை வாங்கி எண்ணி பார்த்த போது அதில் ரூ.7,400/-இருந்தது. அப்பணத்தை பற்றி அவரிடம் கேட்ட போது, அதிலிருந்த பணம் ரூ.400/- தனது தினசரி செலவிற்காக வைத்திருந்த தனது சொந்தப்பணம் எனக் கூறவும், ரூ.400/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதுபோக மீதியிருந்த ரூ.7,000/- த்தை (ரூ.500 X 11, 100 X 15) லஞ்சமாக கொடுப்பதற்காக கொண்டு வந்த பணம் எனக்கருதி அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மதியம் சுமார் 12:30 மணியளவில், மேற்படி அலுவலகத்திற்கு வந்த நபரை விசாரணை செய்ததில், அவர் தனது பெயர் D. உஜால் சர்கர் என்றும், அவர் சொந்தமாக வாடிப்பட்டியில் சைபா கிளினிக் வைத்துள்ளதாகவும், மேற்படி அலுவலகத்திற்கு அவரது தம்பிக்கு டிரைவிங் லைசென்ஸ் எடுப்பதை பற்றி கேட்பதற்காக வந்ததாக கூறினார். அவரை சந்தேகத்தின் அடிப்படையில், ஊ.த.க. பிரிவு காவலர்கள் உதவியுடன் அவரை சோதனை செய்த போது, அவர் அவரது பேன்ட்டின் பின்பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பர்ஸிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதனை வாங்கி எண்ணி பார்த்த போது அதில் ரூ.1,670/- அப்பணத்தை பற்றி அவரிடம் கேட்ட போது, தனது சொந்த செலவுக்காக ரூ.170/-யும், லைசென்ஸ்காக ரூ.1,500/- வைத்திருப்பதாகவும், தனது தம்பியின் லைசென்ஸ் பெறுவதற்கு சம்பந்தமான ஆவணங்கள் எதுவும் தன்னிடம் இல்லை என்றும் கூறினார். எனவே அதில் இருந்த ரூ.170/-யை

அவரிடமே ஒப்படைக்கப்பட்டு, அது போக அவரிடமிருந்த ரூ.1,500/- (ரூ.500 **X 3)** மேற்படி அலுவலகத்தில் லஞ்சம் கொடுப்பதற்காக கொண்டு வந்த பணம் எனக்கருதி D. உஜால் சர்கரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலக வாயிலின் அருகில் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் நின்று கொண்டிருந்த விஜய்பாண்டி அவர்களை விசாரணை செய்ததில், அவர் டிரைவராக வேலை பார்த்து வருவதாகவும், அவர் பேட்ஜ் லைசென்ஸ் எடுப்பத்தற்காக மதியம் சுமார் 12:45 மணியளவில் வந்து நின்று கொண்டிருந்ததாகவும் தெரிவித்தார். அவரை சந்தேகத்தின் அடிப்படையில், ஊ.த.க. பிரிவு காவலர்கள் உதவியுடன் அவரை சோதனை செய்த போது, அவர் அவரது கருப்பு பேண்ட்டின் வலது பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பணகத்தையை எடுத்து ஆஜர் செய்தார். அதனை வாங்கி எண்ணி பார்த்த போது அதில் ரூ.27,500/-இருந்தது. அப்பணத்தை பற்றி அவரிடம் கேட்ட போது, ரூ.500/- தனது தினசரி செலவுக்காக வைத்திருப்பதாகவும், அதுபோக ரூ.27,000/-யை திருவாலயநல்லூரில் SNS Ashok Leyland கடையில் தோஸ்த் லோடு வண்டி எடுப்பதற்காக வைத்திருப்பதாகவும், மேலும் அதற்கான ஆவணங்கள் ஏதும் தன்னிடம் இல்லை என்றும் தெரிவித்தார். அவர் கூறிய விபரம் ஏற்றுக்கொள்ளும்படி இல்லாத காரணத்தினால் அவரது சொந்தப்பணம் ரூ.500/-ஐ அவரிடமே திருப்பி கொடுத்தது போக, மீதப்பணம் ரூ.27,000/- ஐ அவர் மேற்படி அலுவலகத்தில் லஞ்சம் கொடுப்பதற்காக கொண்டு வந்த பணம் எனக்கருதி ரூ.27,000/- (ரூ.500 X 54) அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து, மேற்படி அலுவலக வாயிலின் தெற்கு பக்கம் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் நின்று கொண்டிருந்த நபரை விசாரணை செய்ததில், அவர் தனது பெயர் R. வீரன் என்றும், அவர் விவசாய வேலைகளுக்காக சொந்தமாக டிப்பர் வாகனம் TN 59 2292 வைத்துள்ளதாகவும், அதற்கு FC எடுப்பதற்காக இன்று மதியம் சுமார் 01:00 மணியளவில் வந்ததாகவும் கூறி, தனது சட்டையில் வலது பக்க மேல்பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.2,000/-த்தை (ரூ.200 X 10) எடுத்து ஆஜர் செய்து, அதில் ரூபாய் ஆயிரம் தனது சொந்தப்பணம் என்று கூறினார். அது போக மீதியுள்ள ரூ.1,000/-த்திற்கு **(ரூ.200 X 5)** சரியான முகாந்திரம் கூறாததால் அதனை

அவர் மேற்படி அலுவலகத்தில் லஞ்சம் கொடுப்பதற்காக கொண்டு வந்த பணம் எனக்கருதி அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மேற்படி அலுவலக வாயிலின் தெற்கு பக்கம் உள்ள சிறிய காலியான இடத்தில் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் நின்று கொண்டிருந்த நபரை விசாரணை செய்ததில், அவர் தனது பெயர் கருப்பையா என்றும், அவர் சொந்தமாக வாடிப்பட்டியில் ஆம்புலன்ஸ் வைத்து ஓட்டி வருவதாகவும், மதியம் சுமார் 01:00 மணியளவில், மேற்படி அலுவலகத்தில் உள்ள வாழை மரத்தில் வாழை இலை பறிப்பதற்காக வந்தாக கூறினார். அவரை சந்தேகத்தின் அடிப்படையில், ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு. ஸ்ரீதரபாண்டியன் அவர்கள், ஊ.த.க. பிரிவு காவலர்கள் உதவியுடன் அவரை சோதனை செய்த போது, அவர் அவரது கால் சட்டையில்இடது பக்கம் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதனை வாங்கி எண்ணி பார்த்த போது அதில் ரூ.20,900/- இருந்தது. அப்பணத்தை பற்றி அவரிடம் கேட்ட போது, அவர் அதனை அவரது மகளுக்கு சீதனம் கொடுப்பதற்காக ரூ.20,000/-த்தையும், தனது சொந்த செலவுக்காகரூ.900/-த்தையும் வைத்திருப்பதாக கூறி தனது மனைவிக்கு அதனை பற்றிய விபரங்கள் தெரியும் என கூறினார். அது சம்பந்தமாக அவரது மனைவியை தொடர்பு கொண்டு பேசிய போது, திருமதி. பவானி அவர்கள் அப்பணத்தை பற்றி தனக்கு எதுவும் தெரியாது எனக்கூறியதால், அவரது சொந்த செலவுக்கான பணம் போக மீதப்பணம் ரூ.20,000/- (ரூ.500 X 40) ஐ கருப்பையா அவர்கள் மேற்படி அலுவலகத்தில் லஞ்சம் கொடுப்பதற்காக கொண்டு வந்த பணம் எனக்கருதி கருப்பையாவிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மதியம் சுமார் 13:30 மணியளவில், மேற்படி அலுவலகத்திற்கு வந்த நபரை விசாரணை செய்ததில், அவர் தனது பெயர் செந்தில்குமார் என்றும், தனது சொந்த ஊர் வாடிப்பட்டி அருகில் உள்ள தனிச்சியம் என்றும், தான் கடந்த ஒரு வருடமாக வாடிப்பட்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில், ஆய்வாளர் திரு.முரளி அவர்களின் உத்தரவின் பேரில், அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிசெய்து வருவதாகவும், தனக்கு சம்பளமாக அவர் தினமும் ரூ.200/- கொடுப்பதாகவும், மேலும், அவர் கூறும் அலுவல்களை தான் செய்து வருவதாகவும், இன்று தனது சொந்த வேலை காரணமாக தாமதமாக

வந்ததாகவும் கூறினார். அவரை சோதனை செய்த போது, அவர் அவரது பேண்ட்டின் வலது பாக்கெட்டில் வைத்திருந்த பர்ஸிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதனை வாங்கி எண்ணி பார்த்த போது அதில் ரூ.5,540/- இருந்தது. அப்பணத்தை பற்றி அவரிடம் கேட்ட போது, அவர் கூறிய காரணம் சந்தேகப்படும்படி இருந்ததால் அவரிடமிருந்த மேற்படி பணம் ரூ.5,540/- லஞ்சப்பணமாக இருக்கலாம் எனக்கருதி ஆய்வுக்குழு ஆய்வாளர் அவர்களால் செந்தில்குமாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. மேற்படி நபர்கள் மேற்படி அலுவலகத்திற்கு பணத்தை கொண்டு வந்ததற்கான காரணத்தை சரியாக கூறாமல், சந்தேகம்படும்படி நடந்து கொண்டதாலும், மேலும், மேற்படி அலுவலகத்தில் கட்ட வேண்டிய பணம் அனைத்தும் ஆன்-லைன் மூலமாகத்தான் செலுத்த வேண்டி இருப்பதாலும், மேற்படி அலுவலகத்திற்கு பணம் கொண்டு வர தேவை இல்லை என்பதாலும், மேலும் அவர்கள் கூறியபடி அதற்கான ஆவணங்கள் ஏதும் இல்லாததாலும், மேற்படி நபர்களிடமிருந்து மொத்தம் **ரூ.65,040/-** விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து மேல் விசாரணைக்காக இளநிலை உதவியாளர் செல்வி. ஜெயலெட்சுமி அவர்கள் ஆஜர் செய்த (1) பணியாளர்கள் பணம் கையிருப்பு பதிவேடு 2026 (பக்கம் 1 முதல் 16 வரை எழுதப்பட்டது), (2) பணியாளர்கள் தினசரி வருகை பதிவேடு 2026 (பக்கம் 1 முதல் 8 வரை எழுதப்பட்டது) (3) பாண்டன் பணியாளர்கள் தினசரி வருகை பதிவேடு 2026 (பக்கம் 1 முதல் 8 வரை எழுதப்பட்டது), (4) மாற்றுப் பணியாளர்கள் வருகை பதிவேடு 2026 (பக்கம் 1 முதல் 8 வரை எழுதப்பட்டது) ஆகிய பதிவேடுகள், திரு. முரளி மற்றும் திரு. மகேந்திரபாபு ஆகியோரின் விடுப்பு கடிதங்கள் மற்றும் இன்று காலையில் திரு. முரளி அவர்களால் சேகரிடம் கொடுக்கப்பட்ட 96 ஆவணங்களும் கைப்பற்றப்பட்டது. அந்த 96 ஆவணங்களின் விபரம் பின்வருமாறு :

ஆவணங்கள்			
வ. எண்.	RC REGISTRATION		
1.	TN 26061 798344293	6.	TN 6000 D 2606000912
2.	TN 26060 61768421300	7.	TN 26061 377886018
3.	TN 599 D 2606000375	8.	TN 26060 586576041

4.	TN 26061 547991839	9.	TN 26051 212751237
5.	TN 26061 327857008	10.	TN 26061 748471087
	LIECENCE BADGE		
11.	2146585126		
12.	2252408326		
	TEST HEAVY		
13.	2653786126		
14.	2654099426		
15.	1331822226		
	MC WG / LMV		
16	2651094526	34.	2653909326
17.	2623880926	35.	2637970926
18.	2425953326	36.	2654192526
19.	2467903726	37.	2640655526
20.	2558031626	38.	2649542626
21.	2635020526	39.	2655336326
22.	2667520126	40.	2633757826
23.	1925912526	41.	2659636426
24.	2582603226	42.	2661069826
25.	260561626	43.	1078343826
26.	2631403726	44.	2665580326
27.	2650059026	45.	2641562726
28.	2642071026	46.	2661679426
29.	2649275026	47.	2566556426
30.	2623991026	48.	2658079126
31.	2609535626	49.	2654402626
32.	2430428726	50.	2595162526
33.	2491745726	51.	2654140626
52.	2654039926	70.	2592678726
53.	2650531226	71.	2594781626
54.	2666066226	72.	2631487226
55.	2653138426	73.	2661081926
56.	2598291026	74.	2643835626
57.	2609078826	75.	2651076126
58.	2628373826	76.	2106029626
59.	2653321026	77.	2653965126
60.	2653996126	78.	2655619026
61.	2631379126	79.	2273304226
62.	2635336226	80.	2618279926
63.	2653374326	81.	2490448026
64.	2649415426	82.	2666576126
65.	2595349426	83.	2642792426
66.	2609393426	84.	2593231426

67.	2639692426	85.	2586351126
68.	2301680026	86.	2540457726
69.	2639181126	87.	2541185626
	CONTAINER LIECENCE		
88.	2632122026		
89.	2524500726		
	FITNESS CERTIFCATE		
90.	TN 260615 V 5191223	94.	TN 260616 V 862882
91.	TN 260618 V 9700132	95.	TN 260617 V 9581414
92.	TN 260617 V 6632226	96.	TN 260616 V 2420830
93.	TN 260616 V 5528255		

மேலும் சோதனையின் போது வாடிப்பட்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக இளநிலை உதவியாளர் செல்வி. ஜெயசெல்வி, BONTON Software Pvt. Ltd., Data Entry Operator திரு. சேகர்; தனிநபர்கள் திரு. பிரேம்குமார், திரு. வெங்கடேஷன், திரு. உஜால் சர்கர், திரு. விஜய்பாண்டி, திரு. வீரன், திரு. கருப்பையா, திரு. செந்தில்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி திடீர் இணை ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.65,040/-, 102 ஆவணங்கள், 9 வாக்குமூலங்கள் ஆகியவற்றை இணைத்துள்ளேன். மேற்படி ஆவணங்கள், அலுவலர்கள் மற்றும் தனிநபர்களின் வாக்குமூலங்களின்படி, மேற்படி அலுவலகத்திற்கு எவ்வித முகாந்திரமின்றி பணத்துடன் இருந்ததற்கும், மேற்படி பணத்திற்கு தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததாலும், தனிநபர்களை தக்க ஆவணமின்றி அலுவலகத்திற்குள் அனுமதித்ததுடன் பண பரிவர்த்தனை அலுவலகத்திற்குள் மேற்கொள்ளகூடாது என்றும், முறையாக கணினி மற்றும் இ-சேவை மூலம் மட்டும் மேற்கொள்ளவேண்டும் என்ற அரசு விதி முறைகளை மீறி தங்களது சுயலாபத்திற்கு பணப்பலன் பெற இருந்தமைக்கு வாடிப்பட்டி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.முரளி, அவ்வலுவலக இளநிலை உதவியாளர் செல்வி. ஜெயசெல்வி, BONTON Software Pvt. Ltd., Data Entry Operator திரு. சேகர் மற்றும் தனிநபர்களான திரு. பிரேம்குமார், திரு. வெங்கடேஷன், திரு. உஜால் சர்கர், திரு.விஜய்பாண்டி, திரு. வீரன், திரு. கருப்பையா, திரு. செந்தில்குமார் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி தங்களிடம் இந்த புகாரை

அளிக்கிறேன். ஒப்பம்/- XXXXX 19.06.2026 (திரு.இரா.ஸ்ரீதரபாண்டியன்), ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் அலுவலகம், மதுரை மாவட்டம். இணைப்பு : 1) தினர் இணை ஆய்வு குறிப்புரை, நாள். 18.06.2026. 2)கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.65,040/-. 3) வாடிப்பட்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட 102 ஆவணங்கள். 5) ஒன்பது வாக்குமூலங்கள்.

Sir, Received this report on 19.06.2026 at 16.45 hrs along with Joint Surprise Check Proceedings dated 18.06.2026, Cash Rs. 65,040/-, 9 Statements and 102 documents. After obtaining permission from the Superior Officers, I have registered a case in Madurai V&AC Crime No.06/2026 u/s 7, 7A of P.C. Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 and 106 BNSS Act on 19.06.2026 at 17.30 hrs. Sd/- XXXXX 19/06/2026 (C.Jeyapriya), Inspector of Police, V&AC, Madurai.

The original FIR along with report dated 19.06.2026 of Tr.R.Sritharapandian, Joint Surprise Check Proceedings Dated: 18.06.2026, Statements of officials (2) and statement of the Private Individuals (7) are submitted to the Hon'ble Principal District Judge, Principal District and Sessions Court Madurai and other copies were sent to the officers concerned.

(C.Jeyapriya),
Inspector of Police,
V&AC, Madurai.
(19.06.2026)